**கொரோனா இல்லா கரூர்**

**கைகழுவு! விலகியிரு! கவசமிடு!**

–மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர்

செ.வெ.எண்.26 நாள்:10/08/2021

**கரூர் மாவட்டத்தில் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொரோனா பேரிடரால் வெளிநாடுகளில் இருந்து தமிழகம் திரும்பியவர்கள் தொழில் தொடங்க மானியத்துடன் கடன் உதவி – மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

படித்த வேலைவாய்ப்பற்ற, முதல் தலைமுறையினரை தொழில் முனைவோராக்கும் பொருட்டு தமிழக அரசு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தினை உருவாக்கியுள்ளது. பட்டம், பட்டயம், தொழிற்கல்வி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தொழில் பயிற்சி சான்றிதழ் பெற்ற இளைஞர்கள் மற்றும் மகளிர் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து 25%அரசு மானியத்துடன் கூடிய கடனுதவி பெற்றுபயன் பெறலாம்.

கோவிட் –19 பெருந்தொற்று காரணமாக இந்தியாவிற்கு திரும்பிய வெளிநாடுவாழ் இந்தியர்கள் பயன்பெறும் வகையில் தமிழக அரசு அரசாணை எண் 84, நாள்: 05.02.2021 இல் நீட்ஸ் திட்டத்தில் சில தளர்வுகளுடன் நீட்ஸ் சிம் (New Entrepreneur cum Enterprise Development Scheme – Special Initiative for Migrants) என்ற புதிய திட்டத்தினை அறிமுகபடுத்தியுள்ளது.

<u>இத்திட்டத்தின் சிறப்புஅம்சங்கள்:–</u>

1. இத்திட்டத்தில் பயன்பெறும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் எம்பிளாய்மென்ட் விசா (Employment Visa) – வில் வெளிநாட்டில் வேலை பார்த்தவராக இருக்க வேண்டும்.
2. 01.01.2020 –க்கு பின்னர் தாயகம் திரும்பிருக்கவேண்டும்.
3. இந்ததிட்டம் 01.01.2021 முதல் 31.03.2024 வரை நடைமுறையில் இருக்கும்.

இந்த திட்டத்தில் விண்ணப்பம் செய்து பயன்பெற விரும்பும் பயனாளிகள் என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயன் பெறபொதுமேலாளர், மாவட்ட தொழில்மையம், சத்தியமூர்த்தி நகர்,

தாந்தோணிமலை, கரூர் என்ற முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டும் என கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.